
## திராவிடத்தால் வாழ்கிறோம்

891

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

128






# அறிஞர்கள் அவையம்!

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

'உலகின் மூத்தகுடி பேசிய மொழி தமிழ்' என நாம் பெருமை கொண்டிருந்தாலும், காலத்துக்கு ஏற்ப தமிழை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும். அந்த வகையில், நல்லாட்சி செய்யும் நம் திராவிட மாடல் அரசு தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செய்து வருபவை ஏராளம். குறிப்பாக, இன்றைய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப உலகில் தாய்மொழிப்பற்று குறைந்துவிடுமோ என்ற ஏக்கம் பலருக்கும் நிலவுகிறது. இப்படியான சூழலில் தமிழ் உணர்வு மேலும் செம்மையாக, தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள திட்டம்தான் **'அறிஞர்கள் அவையம்'**.

2025 - 26 நிதிநிலைக் கூட்டத்தின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது உத்தரவின்பேரில், சட்டமன்றத்தில் தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழ் மொழி மற்றும் அதன் சிறப்புகளை அனைத்துத் துறைகளிலும் உலக அளவில் கொண்டு செல்லும் வகையில், திட்டங்கள் தீட்டப்படும் என்று அறிவித்தார் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்.

அந்த அறிவிப்பு, அடுத்த சில மாதங்களிலேயே செயல்வடிவம் பெற்றுள்ளது. 'அறிஞர்கள் அவையம்' என்று தொடங்கப்பட்டுள்ள திட்டத்தின் வழியாக, மாதந்தோறும் துறை சார்ந்த வல்லுநர்களின் கருத்துகளைக் கேட்டு, அவை திட்டங்களாக நிறைவேற்றப்படும். இந்தக் கலந்தாய்வுக் கூட்டம் மே மாதம் தொடங்கப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வருகிறது. அறிஞர்களிடமிருந்து பெறப்படும் கருத்துகள் மின்னணு வடிவிலும், கட்டுரை களாகவும் அடுத்தகட்ட நிகழ்வுகளுக்காகவும், அரசு செய்யவேண்டிய பணிகளுக்காகவும், அரசிடம் கொண்டு செல்லப்படும்.

### முதலமைச்சரின் வாழ்த்து

மே மாதம் 30-ஆம் தேதி, முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளுடன் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. "தமிழ்மொழியில் பல்வேறு துறைகள் சார்ந்து இதுவரை நிகழ்ந்தவை குறித்தும் - இனி நிகழவேண்டியவை குறித்தும், துறைசார்ந்த அறிஞர்களின் கருத்துக்கேட்கும் தமிழ்வளர்ச்சித் துறையின் இந்தத் திட்டம் வெற்றிபெற வாழ்த்துகிறேன்" என சமூக வலைதளத்தில் வாழ்த்தியிருந்தார் நம் முதலமைச்சர்.



தொடக்க நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் மு.பெ.சாமிநாதன், "தமிழ் அறிஞர்களின் அனுபவங்களை, ஒன்றுதிரட்டி தமிழை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த முயற்சியை எடுத்துள்ளோம். இந்த நிகழ்வு மூலம் தமிழ் உணர்வு நிலைபெறும், செம்மை பெறும்" என வாழ்த்தினார்.

இந்தத் திட்டத்தின்கீழ் முதல் நிகழ்ச்சியாக தமிழ் அகராதியியல் குறித்த உரையாடல் நடைபெற்றது. பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட முனைவர்கள் கலந்துகொண்டு கட்டுரைகள் வழங்கினர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் பேசுகையில், "எங்கள் நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்படும் 'அறிஞர்கள் அவையம்' திட்டத்தில் மாதம் ஒரு நிகழ்வு என மொத்தம் 12 நிகழ்வுகள் நடத்தப் படும். வெறுமனே பேசினோம், கலைந்தோம் என்றில்லாமல், நடைமுறை சார்ந்த செயல் திட்டமாக இந்நிகழ்ச்சி அமையும். ஒவ்வொரு நிகழ்வின் முடிவிலும் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கான வழிகாட்டும் குழுக்கள் அமைக்கப்படும்.



இன்றைய செயற்கை நுண்ணறிவு உலகில் தமிழ்மொழியை எவ்வாறு அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லலாம் என்பது குறித்து ஆராயப்படும்" என்றார்.

### தமிழ் அகராதியியல்

இந்தத் திட்டத்தின் தொடக்க நிகழ்வாக 'தமிழ் அகராதியியல்' என்ற தலைப்பில் உரையாடல் நடைபெற்றது. இதில் தமிழறிஞர்கள், வல்லுநர்கள், பேராசிரியர்கள், தங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எடுத்து வைத்தனர்.

> **"தமிழ்மொழியில் பல்வேறு துறைகள் சார்ந்து இதுவரை நிகழ்ந்தவை குறித்தும் - இனி நிகழவேண்டியவை குறித்தும், துறைசார்ந்த அறிஞர்களின் கருத்துகேட்கும் தமிழ்வளர்ச்சித் துறையின் இந்தத் திட்டம் வெற்றிபெற வாழ்த்துகிறேன்"**

இரண்டாவது மாதமாக ஜூன் மாதம் 26-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வில், **'சங்க இலக்கியம் நிகழ்ந்தனவும், நிகழவேண்டியனவும்'** என்கிற பொருண்மையில் நிகழ்வு நடைபெற்றது. அதுதொடர்பாக, முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், வீ.அரசு உள்ளிட்ட ஆளுமைகள் உரையாற்றினர்.

## உலக அரங்கிற்கு ஒரு கலந்துரையாடல்!

அறிஞர்கள் அவையத்தின் நோக்கம், தமிழ்மொழியை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்வதற்கான கலந்துரையாடல் மட்டுமல்ல; மொழியில் கலந்துள்ள பிறமொழிக் கலப்புகளைக் கண்டறிந்து நீக்குவதும் முக்கிய பணியாக உள்ளது. முதல் நிகழ்ச்சியின் பொருண்மையாக எடுத்துக்கொள்ளப்பட்ட அகராதியியல் மூலம் தமிழ் அகராதிகள் குறித்த விவாதம் நடைபெற்றது.

'தமிழ் லெக்ஸிகன்' எனப்படும் பேரகராதியில், ஒரு லட்சம் சொற்கள் உள்ளன. அவற்றில் 40 ஆயிரம் சமஸ்கிருதச் சொற்கள் கலந்துள்ளன. அதுமட்டுமல்ல, 40ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கு, சமஸ்கிருதத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளன. இது, எதார்த்தமாக நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. திட்டமிட்டுத் திணிக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. முதலில், அந்த சமஸ்கிருதத் திணிப்பை நீக்க வேண்டும் என்கிற அளவில், உரையாடல்கள் நடைபெற்றன.

### நீண்ட–குறுகிய காலத் திட்டங்கள்

வெவ்வேறு கால கட்டங்களில் உருவாகும் வெவ்வேறு அகராதிகளை ஒழுங்குபடுத்தவும், புதிய சொற்களையும், அவற்றுக்கான பொருளையும், துணை நூல்களின் வாயிலாக புதுப்பிக்க வேண்டும் எனவும் நிகழ்ச்சியில் முடிவு செய்யப்பட்டது. இவற்றுக்கான பணிகளை குறுகிய கால திட்டம், நீண்ட கால திட்டம் என வரையறுத்துச் செயலாற்றவும் அறிஞர்கள் அவையம் திட்டமிட்டுள்ளது.

இரண்டாவது பொருண்மையாக எடுத்துக் கொள்ளப்பட்ட சங்க இலக்கியம் அமர்வில், சங்க இலக்கியத்துக்கு அகராதி இல்லை என்ற குறையை நீக்கவும், அவற்றின் உருவாக்கத்தை கவனித்து, தொகுக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர்கள் கலந்து கொள்கின்றனர். இந்நிகழ்வுகள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாட்டிலும் நடத்தவும் அறிஞர்கள் அவையம் திட்டமிட்டுள்ளது.

இந்த அறிஞர்கள் அவையம் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.42 லட்சம்தான். ஆனால், திட்டம் உருவாக்க உள்ள மொழி உணர்வோ விலைமதிக்கமுடியாதது. நம் தாய்மொழியின் சிறப்பை தரணி எங்கும் சேர்க்கட்டும் அறிஞர்கள் அவையம்.

...சாதனை தொடரும்

## இனி வடக்குக்கும் புரியும்!

மும்மொழிக் கொள்கைக்கு எதிரான தமிழ்நாட்டின் எதிர்ப்புச் சுழல், இப்போது மராட்டியத்தை மையம் கொண்டிருக்கிறது. "இந்தியை ஒருபோதும் ஏற்க மாட்டோம். இந்தி வெறும் 200 ஆண்டுகால மொழி; இந்தி பேசாத மாநிலங்கள் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. 3-ஆம் மொழியாக இந்திக்கு இந்தியாவில் என்ன தேவை உள்ளது?" என்று கூறியிருக்கிறார் ராஜ் தாக்கரே.

இதையொட்டி, தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியுள்ள கழக இளம் பேச்சாளர் திருமேனி, "இந்தியைத் திணிக்காதே என்று தமிழ்நாடு 80 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னபோது நம்மை தேசத்துரோகிகள், பிரிவினைவாதிகள், மொழி வெறியர்கள் என்று குற்றம்சாட்டினார்கள். ஆனால், இந்த 80 ஆண்டுகளில் 'இந்தி' என்கிற ஒரு மொழி இல்லாமல் கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில், சமூக நல்லிணக்கத்தில் தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது. சர்வதேச தரக் குறியீடுகளில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக இருக்கிறது தமிழ்நாடு. ஆனால், இதே இந்தியை ஏற்றுக்கொண்ட மாநிலங்கள் கல்வியில், வேலைவாய்ப்பில் மேற்சொன்ன அனைத்து சமூகக் குறியீடுகளிலும் தமிழ்நாட்டை விட மிகக் குறைவான மதிப்பீடுகளையே பெற்றுள்ளன.

இணைப்பு மொழி ஆங்கிலம் போதும், அதுதான் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் என்று தமிழ்நாடு சொன்னபோது அதை வடநாடு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இந்தியை ஏற்றுக் கொண்ட மாநிலங்கள் ஆங்கில மொழியைக் கற்பிப்பதில் மிகக் குறைந்த செயல்பாட்டையே கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் இருமொழி அல்ல; ஒரு மொழியைக்கூட சில மாநிலங்களில் சிறப்பாக கற்பிக்கவில்லை. இந்தியை அனுமதித்ததால் தங்கள் மொழி அழிந்துகொண்டிருக்கிறது என்பதை இப்போதுதான் புரிந்துகொள்ளத் தொடங்கி உள்ளனர். ஆதிக்க இந்திக்கு எதிராக போர்க்கொடி தூக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

நாம் பேசுவது பிரிவினை அல்ல, கூட்டாட்சி உரிமை என்று அவர்களுக்கு இப்போது புரியும். 'இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு யாருக்கும் எதிரி அல்ல. அவரவர் மொழி, அவரவர் கலாச்சாரம், அவரவர் பண்பாடுகளுடன் இணைந்து வாழ்வோம்' என்கிற கூட்டாட்சித் தத்துவத்தைத்தான் தமிழ்நாடு எப்போதும் கற்பிக்கிறது" எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### சட்டக் கல்லூரியில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்!



ஜி.விக்டர் தேவசகாயம்

1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டக் கல்லூரியில் சேர்ந்தேன். அப்போது அதுவரை அங்கு இல்லாத திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை சக மாணவர்களுடன் தோற்றுவித்து, கூட்டங்களை நடத்தினோம். அப்போது மாணவர் அணிச் செயலாளராக இருந்த மிசா.கணேசன் மற்றும் இன்றைய அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் எங்களை அழைத்து, தலைவர் கலைஞர் அவர்களையும் பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் சந்திக்கச் செய்தனர். அன்றைக்கு அரசினர் தோட்டத்தில் அமைந்திருந்த கட்சி அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. அப்போது எடுத்துக்கொண்ட விலைமதிப்பற்ற புகைப்படம் இது.

**– ஜி.விக்டர் தேவசகாயம், ஓய்வு பெற்ற பேராசிரியர், சேலையூர், தாம்பரம், சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாணவர்களும் சமுதாயமும்!

1967-ஆம் ஆண்டு சென்னை, லயோலா கல்லூரி விழாவில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, "அரசியலைக் கவனிக்க அரசியல் கட்சிகள் இருக்கின்றன. நமக்கென்ன என்று மாணவர்கள் இருக்கக் கூடாது. ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட நாம், அந்த ஜனநாயகத்தை நல்ல முறையில் பாதுகாக்க, மக்களிடம் ஜனநாயக உணர்வைப் புகுத்த வேண்டும். அப்படிப் புகுத்துவது மாணவர்களாகிய உங்களின் கடமையாகும்" என மாணவர்களுக்கு அரசியல் அழைப்பு விடுத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131